# பொருளுக்கேற்ற திருக்குறளைத் தேர்ந்தெடுக்கவும்

1

நன்கு கல்விகற்ற ஒருவர் தூய அறிவின் வடிவாக விளங்கும் இறைவனை வணங்காவிடில், அவர் கற்ற கல்வி பயனற்றதாகி விடும்.

2.

கற்றவர்கள் கண்ணுள்ளவர்கள் எனச் சொல்லத் தகுதியுடையவர்கள். கல்லாதவர்கள் முகத்தில் இருப்பது புண்கள் எனக் கருதப்படுகின்றது.

3.

நன்கு ஆராய்ந்தபின் ஒரு செயலை மேற்கொள்ள வேண்டும்; தொடங்கிவிட்டு ஆராய்ந்து கொள்ளலாம் என்பது குற்றம்.

4.

ஒழுக்கம் ஒரு மனிதனுக்குப் பெருஞ் சிறப்பைத் தரவல்லது. இவ்வொழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதிக் காக்க வேண்டும்.

5.

உடுத்திய ஆடை நழுவும்போது ஒருவருடைய கை அவரறியாமல் உடனே ஆடையை இழுத்து மானத்தைக் காப்பது போன்று நண்பருக்குத் துன்பம் வந்தகணமே ஓடிச்சென்று அதனைப் போக்குவதே நட்பாகும்.

6.

நெருப்பினால் சுட்ட புண் வெளியில் தழும்பு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால், உள்ளம் புண்படும்படி பேசுகின்ற பேச்சால் ஏற்படுகின்ற பாதிப்பு என்றும் மறையாது.

LIVEWORKSHEETS

| | |
|---|---|
| **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்.** | **எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு.** |
| **கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்.** | **தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு.** |
| **உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு.** | **கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்.** |

**காலி இடத்தை நிறைவு செய்து திருக்குறளை முழுமைப்படுத்தவும்**

அகர முதல ________________________ ஆதி

__________________ முதற்றே உலகு.

______________________ எல்லாம் `அ` எனும் எழுத்தை ____________________________ கொண்டிருக்கின்றன. அதுபோல் ____________ கடவுளை அடிப்படையாகக் _____________________________.

| | | |
|---|---|---|
| எழுத்துகள் | கொண்டிருக்கின்றது. | எழுத்தெல்லாம் |
| பகவன் | அடிப்படையாகக் | உலகம் |

LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS